for 10 per cent extra towards escalation of rates for 1981-82. This upgraded estimate approved by the Chief Engineer is under the active consideration of the Government.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### சட்டமன்றப் பேரவை எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் வீட்டின் முன்பு நடைபெற்ற தாக்குதல் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 23—3—1981 அன்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் சட்டமன்றப் பேரவை எதிர்க் கட்சித் தலைவருமான கலைஞர் அவர்களது வீட்டின் முன்பு ஒரு கூட்டம் நுழைய முயன்று அங்கிருந்த ஊழியர் ஒருவரையும் தாக்கி வன்முறையில் ஈடுபட்டதாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத் திற்கான முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார். இது எவ்வாறு விதிகளின் கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாகச் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. ம. சங்கரலிங்கம் : தலைவரவர்களே, 23—3—1981 அன்று மாலை சுமார் 4 மணியளவில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், சட்ட மன்றப் பேரவை எதிர்க் கட்சித் தலைவருமான டாக்டர் கலைஞர் அவர்களது வீட்டின் முன்பு ஒரு கூட்டத்தினர் நுழைய முயன்று அங்கிருந்த ஊழியர் ஒருவரையும் தாக்கி வன்முறையில் ஈடுபட்டுள்ளனர். அதுவும் ஒரு கட்சி யினுடைய பிரச்சாரகராகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிற ஒரு அம்மையாருடைய தலைமையில் 12 பேர் சேர்ந்து அங்கு ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள். அந்த வீட்டிலே சட்டமன்றப் பேரவை எதிர்க் கட்சித் தலைவர் என்கிற நிலையில் அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள அரசு ஊழியர், அவர்களிடம் போய் "நீங்கள், டாக்டர் கலைஞர் அவர்கள் வீட்டில் இல்லாததால், அவர் இருக்கிற இடத்திற்குச் சென்று, உங்களுடைய கோரிக்கைகளை, கருத்துக்களைச் சொல்லுங்கள், இன்ன இடத்தில் இருக்கிறார், வீட்டுக்கு வரக் கூடாது" என்று சொல்லி யிருக்கிறார். இந்தச் சம்பவம் தமிழகத்தினுடைய அரசியல்

வாழ்க்கை எங்கு போய்க்கொண்டிருக்கிறது என்பதை நமக்குக்

(முற்பகல் 10-10)

கண்கூடாக எடுத்துக்காட்டுகிறது. ஒரு நாட்டினுடைய அரசியலில் ஜனநாயகம் தழைக்க வேண்டும் என்று சொன்னால், மாறுபட்ட கருத்துக்களை எடுத்துச்சொல்லும் கட்சிகளும், கட்சித் தலைவர்களும் பாதுகாப்பான நிலையில் இருந்து தங்களுடைய பணியைச் செய்ய அனுமதிக்க வேண்டும். அந்தச் சூழ்நிலையை உருவாக்க வேண்டியது அரசினுடைய கடமை, பொறுப்பு. அந்த நிலைக்கு மாறாக ஒருவேளை எதிர்ப்புகளையும், மறுப்புகளையும் தெரிவிப்பவர்கள் அரசியல் கட்சித் தலைவர்கள் இருக்கும் இடங்களிலே சென்று சொல்லலாம் என்ற மரபு உருவாக்கப்பட்டால், அவர்களுடைய வீடு நிம்மதியாக இருக்குமா? வீட்டிலே இருக்கும் பெண்கள், குழந்தைகள் எல்லாம் அமைதியாக வாழ முடியுமா? ஒருவேளை அரசியல் அலுவலகங்களிலே சென்று இத்தகைய ஆர்ப்பாட்டம் செய்தாலும்கூட, அது அனுமதிக்கப்படக்கூடாது என்று சொல்லும் இந்தக் காலகட்டத்தில், அவர்கள் தங்கியிருக்கும் வீட்டிலே சென்று இன்னொரு கட்சியின் பிரச்சாரகருடைய தலைமையிலே ஆர்ப்பாட்டம் செய்யப்படுகிறது. அது தொலைபேசி மூலம் அறிவிக்கப்பட்டவுடன், போலீசார் வந்து அவர்களை அழைத்துச் சென்றார்கள். பிறகு நீதிமன்றத்திற்குச் சென்று அவர்கள் ஜாமீனில் எடுக்கப்பட்டு, அரசு வேனிலேயே அவர்கள் வீட்டிலே கொண்டுபோய் விடப்பட்டிருக்கிறார்கள். முதலிலே எந்த வேனிலே அவர்கள் கொண்டுவரப்பட்டார்கள் என்ற தகவல் இல்லை. இத்தகைய நிலை நீடித்தால், ஒவ்வொரு அரசியல் கட்சித் தலைவர்களும், தலைவர்களுடைய வீடுகளும் எந்தெந்த நிலைமைகளுக்கு ஆளாக்கப்படும் என்ற அச்சத்தாலும், ஜனநாயகம் இந்த நாட்டிலே நிலைக்க வேண்டும் என்ற நிலையாலும், மாறுபட்ட அரசியல் கருத்துக்களை எடுத்து வைத்து நல்ல பாரம்பரியமான ஒரு அரசியல் நாகரிகத்தை உருவாக்க வேண்டும் என்ற நிலையாலும், அத்தகைய எண்ணங்கள் கொண்ட அத்தனை பேருடைய உள்ளத்திலேயும் இது வருத்தத்தையும், அச்சத்தையும், அதிர்ச்சியையும் தருகிற சம்பமாக இருக்கிறது. இத்தகைய நிலை என் உருவானது என்று சொன்னால், இங்கு இருக்கக்கூடிய ஆளும் கட்சி எதிர்க் கட்சியாக இருக்கும்போதே சட்டமன்ற உறுப்பினர்கள் வீடுகளிலே போய் அவர்களுடைய மனைவி மக்கள் இருக்கும் இடங்களிலே போய் ஆர்ப்பாட்டம் செய்யலாம் என்ற ஒரு தத்துவத்தை அவர்கள் அறிவித்து, அதன்படி நடைமுறைப் படுத்தினார்கள். அதன் பிறகு அதே கொள்கையை ஆளும் கட்சியான பிறகும் அவர்கள் கடைப்பிடித்து நடைமுறைப்படுத்துவது இந்த நாட்டினுடைய ஜனநாயக வளர்ச்சிக்கு உகந்ததாகாது என்று சொல்லி

1981 மார்ச் 25] [திரு. ம. சங்கரலிங்கம்]

இதனால் எதிர்காலத்திலே உருவாகும் நிலை பற்றி ஆராயவும், இத்தகைய நிலைமைகளைத் தவிர்க்கவும் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழக முதல்வரைப்பற்றித் தகாத வார்த்தைகளை, பேரவை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியதற்காக அவர் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று கோரி, கோரிக்கையை எழுப்பிக்கொண்டு 23—3—1981 அன்று மாலை சுமார் 5-45 மணியளவில், திருமதி வண்ணை அனுராதா மற்றும் 11 பெண்கள், கோபாலபுரம் நான்காவது தெருவில் உள்ள பேரவை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களின் வீட்டின் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர். தகவல் அறிந்ததும் இராயப்பேட்டை காவல் நிலையத்தைச் சேர்ந்த காவல் துறையினர் விரைந்து வந்து அவர்களை அப்புறப்படுத்தினர். பேரவை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களது இல்லத்தில் பணிபுரியும் செயல்மணி என்பவர் தன்னைத் தாக்கியதாகவும், தனது பெண்மைக்குக் களங்கம் ஏற்படுத்திய தாகவும் திருமதி வண்ணை அனுராதா கொடுத்த புகாரின்பேரில், இ-2 இராயப்பேட்டை காவல் நிலையக் குற்ற எண் 527/81-ல் இ.த.ச. பிரிவு 341, 354 ஆகியவற்றின் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

திருமதி வண்ணை அனுராதாவின் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்திய பெண்கள் தன்னைத் தாக்கியதாக, திரு. செயல்மணி கொடுத்த புகாரின்பேரில், இ-2 இராயப்பேட்டை காவல் நிலையக் குற்ற எண் 528/81-ல், இ.த.ச. பிரிவுகள் 143, 341, 321 மற்றும் சென்னை நகரக் காவல் சட்டம் பிரிவு 41 ஆகியவற்றின்கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. திரு. செயல்மணி இராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு சிகிச்சை அளிக்கப் பட்டார்.

இரு வழக்குகளிலும் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு, பிறகு அன்றையதினமே ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர். வழக்குகள் புலனாய்வில் உள்ளன. புலனாய்வு முடிந்தவுடன் முறைப்படியான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் எடுத்துத் தெரிவித்ததற்கிணங்க, இது வருந்தத் தக்க நிகழ்ச்சிதான். அரசியலிலே தனிப்பட்டவர்களுடைய வீட்டிலே போய் ஆர்ப்பாட்டம் நடத்துவதை ஜனநாயக மரபுப்படி ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஆகவே, இந்த நடவடிக்கைகளைப் பொறுத்து அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும் என்று நான் உறுதி கூறுகிறேன். அவர்கள் எடுத்துச்

சொன்னபடி, தனிப்பட்டவர்களுடைய இல்லத்தில் எந்த நேரத்தில், யார் எத்தகைய ஆர்ப்பாட்டம் நடத்தினாலும், அதை ஏற்றுக்கொள்ள முடியாது. அது ஜனநாயகக் கொள்கைக்கு உகந்ததல்ல. அதற்கு இடமளிக்காத வகையில் அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் அத்தனை பேரும் ஒரு தன்மையாக வந்தால் கூட, அது மிகவும் நல்லது. அப்படிப்பட்ட மரபையும் ஒழுங்கையும் ஏற்படுத்துவதற்கு நாம் முயல வேண்டும்; ஏற்படுத்துவது நல்லது. இப்படிப் பட்ட சம்பவம் ஏற்பட்டது வருந்துவதற்குரிய ஒன்று. தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்ற உறுதியை நான் சொல்கிறேன். இப்போது புலனாய்வு நடந்துகொண்டிருக்கிறது. புலனாய்வு முடிந்த பிறகு, முழு விவரங்களும் நமக்குக் கிடைத்துவிடும். அதற்குப் பிறகு அதன்மீது தக்க நடவடிக்கைகளை நாம் சட்டப்படி எடுக்கலாம் என்று தெரிவித்து, இதை விவாதிக்க அவையை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இந்தப் பொருள் குறித்து அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதி என் அனுமதியை மறுக்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு.

### (1) திருநெல்வேலி மாவட்டத்தில் மூளைக்காய்ச்சல் நோய் ஏற்பட்டிருப்பது குறித்து.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் பத்துக்கு மேற்பட்ட குழந்தைகள் மூளைக் காய்ச்சல் நோய் ஏற்பட்டு இறந்ததால், அப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹண்டே :** விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

* **திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவரவர்களே, சென்ற ஆண்டும் இதே ஜனவரி மாதத்தில், திருநெல்வேலி மாவட்டத்தில், மூளைக் காய்ச்சல் ஏற்பட்டு சுமார் 20 பேர் வரை இறந்தார்கள் என்று செய்தி வந்தது. அப்போது இந்த

---

@ 332-333 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.